| | |
|---|---|
| விடுநர், | பெறுநர், |
| முனைவர்.சு.பாலசுப்பிரமணியன், | முதன்மை கல்வி அலுவலர் |
| முதல்வர் | முதன்மை கல்வி அலுவலகம் |
| மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் | வேலூர். |
| பயிற்சி நிறுவனம், | |
| இராணிப்பேட்டை. 632 401 | |

ந.க.எண்.309/அ2/2024,        நாள்.30.08.2024.

பொருள் :– ஆசிரியர் கல்வி – இராணிப்பேட்டை – மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் – செயல் திறன்மிகு வகுப்பறை மற்றும் கணினி தொழில்நுட்பவியல் சார்ந்த பணித்திறன் மேம்பாட்டுப் பயிற்சி – அனைத்து பட்டதாரி ஆசிரியர்களுக்கு 02.09.2024 முதல் 13.09.2024 வரை –வட்டார அளவில் நடத்துதல் – தொடர்பாக.

பார்வை :– சென்னை – 06, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறை கடித ந.க.எண்.000523/எஃப்4/2023, நாள். 14.08.2024.

------------

பார்வையில் கண்டுள்ளவாறு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளி கல்வி இணைந்து ஆசிரியர்களுக்கு மாநில அளவில் செயல் திறன்மிகு வகுப்பறை மற்றும் கணினி தொழில்நுட்பவியல் சார்ந்த பணித்திறன் மேம்பாட்டுப் பயிற்சி மாநில மற்றும் மாவட்ட அளவிலான கருத்தாளர்களுக்கு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பணிபுரியும் அனைத்து பட்டதாரி ஆசிரியர்களுக்கும் வட்டார அளவிலான பயிற்சியானது 02.09.2024 முதல் 13.09.2024 வரை ICT பயிற்சி நடைபெற உள்ளது.

இப்பயிற்சிக்காக அனைத்து Hi TECH ஆய்வகங்கள் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள் சார்ந்த தலைமையாசிரியர்கள் பயிற்சி நடைபெறும் நாள்களில் Hi TECH ஆய்வகங்களைப் பயன்படுத்துவதற்கு முழு ஒத்துழைப்பு வழங்க அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் மூலமாக பெறப்படும் ICT பயிற்சி மையமாக செயல்பட உள்ள பள்ளிகள், பங்கேற்பாளர்களின் பெயர் பட்டியல் மற்றும் மாவட்ட கருத்தாளர்கள் பெயர் பட்டியலில் உள்ள ஆசிரியர்களைப் பயிற்சி நடைபெறும் நாள்களில் பணிவிடுப்பு செய்ய சார்ந்த தலைமையாசிரியர்களுக்கு தக்க ஆலோசனைகளை வழங்குமாறு கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

For 30.8.24

முதல்வர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
இராணிப்பேட்டை.

முதல்வர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும்
பயிற்சி நிறுவனம்
இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம்-632 401

30/8/24

**நகல்.**

1. சென்னை–6 மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு தகவலுக்காக பணிந்து அனுப்பலாகிறது.

2. மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை மற்றும் தொடக்க நிலை) வேலூர் அவர்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காக கனிவுடன் அனுப்பலாகிறது.

3.உதவி திட்ட அலுவலர் வேலூர், அவர்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காக கனிவுடன் அனுப்பலாகிறது.